இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 310 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆனி 06 – வியாழக்கிழமை 20 ஜூன் 2024 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 310 : Thiruvalluvar Year - 2055 - Aani 06 - Thursday 20 June 2024 - Chennai 12 Pages ₹ 5.00

## கள்ளக்குறிச்சியில் கள்ளச் சாராயச் சம்பவம்: இது போன்ற சமூக விரோதச் செயல்களை

# இரும்புக் கரம் கொண்டு அடக்குவோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை,ஜூன்.20-**

**“கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயச் சம்பவம்; இதுபோன்ற சமூக விரோதச் செயல்களை இரும்புக்கரம் கொண்டு அடக்குவோம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

**இந்நிலையில் இச்சம்பவம் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைத்தளத்தில் பதிவிட்டிருப்பதாவது:**

**கள்ளக்குறிச்சியில் கள்ளச் சாராயம் அருந்தியவர்கள் உயிரிழந்த செய்திகேட்டு அதிர்ச்சியும்வேதனையும்அடைந்தேன். இந்த விவகாரத்தில் குற்றத்தில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். தடுக்கத் தவறிய அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

**இதுபோன்ற குற்றங்களில் ஈடுபடுபவர்கள் குறித்து பொதுமக்கள் தகவல் தெரிவித்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். சமூகத்தைப் பாழ்படுத்தும் இத்தகைய குற்றங்கள் இரும்புக்கரம் கொண்டு அடக்கப்படும்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இதுகுறித்து தமிழ்நாடு அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

நேற்று (19.6.2024) கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டத்தில், கருணாபுரம் காலனியைச் சேர்ந்த 26 நபர்கள் வாந்தி, வயிற்று வலி, வயிற்றெரிச்சல் போன்ற உபாதைகள் இருப்பதாகத் தெரிவித்து கள்ளக்குறிச்சி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

காவல் துறை மற்றும் வருவாய்த் துறையினர் மேற்கொண்ட விசாரணையில், மேற்படி நபர்கள் பாக்கெட் சாராயத்தை அருந்தியிருக்கக்கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது. அவர்களில் பிரவீன்குமார், (வயது 26), நேற்று அதிகாலை 3 மணியளவில் வயிற்று வலியின் காரணமாக கள்ளக்குறிச்சி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். மேலும், சுரேஷ், (வயது 40) மற்றும் சேகர், (வயது 59), ஆகியோரும் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாகவும் அவர்களின் உடல்கள், உடல் கூராய்விற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இறப்பின் காரணம், உடல் கூராய்விற்குப் பின்பு தெரியவரும்.



### அதிகாரிகள் நடவடிக்கை!

மேற்கண்ட 26 நபர்களில், வடிவு, மற்றும் கந்தன் ஆகிய இருவரும் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்ட நிலையில் மற்ற அனைவருக்கும் கள்ளக்குறிச்சி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. விழுப்புரம் மருத்துவக் கல்லூரியிலிருந்து நான்கு சிறப்பு மருத்துவர்களைக் கொண்ட மருத்துவர் குழு கள்ளக்குறிச்சி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இந்த மருத்துவக் குழு, பாதிக்கப்பட்ட நபர்களுக்குச் சிகிச்சை அளித்து வருகிறது. அதோடு மட்டுமல்லாமல், சேலம் மற்றும் திருவண்ணாமலை ஆகிய இரண்டு மாவட்டங்களிலிருந்தும், சிறப்பு மருத்துவர் குழு கள்ளக்குறிச்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், 18 நபர்கள் அவசரகால ஊர்தியின் மூலமாக புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு உயர்சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். 6 நபர்களுக்கு அவசர சிகிச்சை அளிப்பதற்காக, சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். 12 அவசர கால ஊர்திகள் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவனையில் தயாராக வைக்கப்பட்டுள்ளது.

### ஒருவர் கைது!

மேல்சிகிச்சைக்குத் தேவையான அனைத்து மருந்துகளும், விழுப்புரம், சேலம், திருவண்ணாமலை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலிருந்து கள்ளக்குறிச்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இப்பணிகளை மேற்பார்வையிட, தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநர் கோவிந்தராவ், மற்றும் மருத்துவக் கல்வி இயக்குநர் ஆகியோர் கள்ளக்குறிச்சிக்கு விரைந்துள்ளனர்.

மேலும், பாக்கெட் சாராயம் விற்ற கோவிந்தராஜ் என்கிற கண்ணுகுட்டி, (வயது 49), என்ற நபர் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 200 லிட்டர் விஷச்சாராயம் கைப்பற்றப்பட்டு, அவை விழுப்புரம் மண்டல தடய அறிவியல் ஆய்வுக்கூடத்திற்கு அனுப்பப்பட்டு, சோதனையில், அதில் மெத்தனால் கலந்துள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது..

### அமைச்சர்கள் எ.வ.வேலு - மா.சுப்பிரமணியன் விரைந்தனர்!

முதலமைச்சர் அவர்களுக்கு இந்த சம்பவம் பற்றிய தகவல் தெரிய வந்தவுடன், உடனடியாக நெடுஞ்சாலை மற்றும் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோரை உடனடியாக கள்ளக்குறிச்சி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்று வரும் நபர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்வதற்கு உத்தரவிட்டுள்ளார்கள்.

இச்சம்பவம் தொடர்பாக கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் ஷ்ரவன்குமார் ஜடாவத், உடனடியாகப் பணியிடமாற்றம் செய்யப்பட்டு, அவருக்கு பதிலாக எம்.எஸ்.பிரசாந்த், , புதிய மாவட்ட ஆட்சித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும், கள்ளக்குறிச்சி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் சமய் சிங் மீனா, இ.கா.ப. தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு, ரஜத் சதுர்வேதி, இ.கா.ப., கள்ளக்குறிச்சி மாவட்டக் காவல் கண்காணிப்பாளராகப் பணியமர்த்தப்பட்டுள்ளார்.

அதோடு மதுவிலக்கு அமலாக்கப் பிரிவைச் சேர்ந்த, காவல் துணைக் கண்காணிப்பாளர் தமிழ்செல்வன், கள்ளக்குறிச்சி மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் நிலைய ஆய்வாளர் திருமதி கவிதா, திருக்கோவிலூர் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் நிலைய ஆய்வாளர் திருமதி பாண்டிசெல்வி, திருக்கோவிலூர், உதவி காவல் ஆய்வாளர் பாரதி மற்றும் அப்பகுதி காவல் நிலைய ஆய்வாளர் திரு ஆனந்தன், உதவி ஆய்வாளர் திரு ஷிவ்சந்திரன், காவல் நிலைய எழுத்தர் பாஸ்கரன், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு மனோஜ், காவல் துணை கண்காணிப்பாளர், திருக்கோவிலூர் ஆகியோரும் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இவ்வழக்கினை தீர விசாரிக்கவும், தக்க மேல்நடவடிக்கைக்காகவும், உடனடியாக சி.பி.சி.ஐ.டி. வசம் ஒப்படைக்க ஆணையிட்டுள்ளார்கள்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

### அதிரடி நடவடிக்கை!

### மாவட்ட ஆட்சித் தலைவர் மாற்றம்!

### மாவட்ட எஸ்.பி. தற்காலிக பணிநீக்கம்!

**இச்சம்பவம் தொடர்பாக கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் ஷ்ரவன்குமார் ஜடாவத், உடனடியாகப் பணியிடமாற்றம் செய்யப்பட்டு, அவருக்கு பதிலாக எம்.எஸ்.பிரசாந்த், புதிய மாவட்ட ஆட்சித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.**

**மேலும், கள்ளக்குறிச்சி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் சமய் சிங் மீனா, இ.கா.ப. தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு, ரஜத் சதுர்வேதி, இ.கா.ப., கள்ளக்குறிச்சி மாவட்டக்காவல்கண்காணிப்பாளராகப்பணியமர்த்தப்பட்டுள்ளார்.**

---

### மானியக் கோரிக்கைகளின் மீது விவாதம்!

# தமிழ்நாடு சட்டப்பேரவைக் கூட்டம் இன்று தொடங்குகிறது!

## காவல் துறை மானியத்தில் 29ஆம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிலுரை!

*சென்னை, ஜூன் 20 -*

*தமிழ்நாடு சட்டப்பேரவைக் கூட்டம் இன்று காலை கூடுகிறது. இன்று தொடங்கும் இக்கூட்டம் வரும் 29ம் தேதி வரை காலை மாலை என இரு வேளைகளிலும் நடைபெறும். இப்பேரவைக் கூட்டத்தில் வருகிற 29ஆம் தேதி அன்று காவல்துறை மானியக் கோரிக்கையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிலுரை வழங்குகிறார்.*

*இதுபற்றிய விவரம் வருமாறு:-*

*தமிழ்நாடு சட்டப்பேரவை கூட்டம் இன்று காலை 10.00 மணிக்கு கூடுகிறது.*

*வருகிற 29ம் தேதி வரை நடைபெறும் சட்டப்பேரவை கூட்டத்தில், மானியக் கோரிக்கைகள் குறித்து விவாதம் நடத்தப்படுகிறது.*

*முதல் நாள் அதாவது இன்றைய கூட்டத்தில், மறைந்த விக்கிரவாண்டி எம்.எல்.ஏ. புகழேந்தி மறைவுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றி அன்றைய தினம் பேரவை கூட்டம் ஒத்தி வைக்கப்படும்.*

*அதைத்தொடர்ந்து வரும் 21ம் தேதி (வெள்ளி) காலை 10 மணிக்கு சட்டப்பேரவை கூடும். காலை 10 மணிக்கு தொடங்கும் சட்டப் பேரவை நிகழ்வுகளை காலை 9.30 மணிக்கு தொடங்குவது தொடர்பாக விதிகள் குழுவில் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் வரும் 21ஆம் தேதி சட்டப் பேரவை கூடியதும் விதிகள் குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு ஒப்புதல் பெறப்பட்டு நிறைவேற்றப்படும்.*

*அதையடுத்து வரும் 22ஆம் தேதி முதல் 29ஆம் தேதி வரை காலை 9.30 மணிக்கு பேரவை கூட்டம் தொடங்கும். வரும் 29ஆம் தேதி தவிர 21ஆம் தேதி முதல் 28ஆம் தேதி ஆகிய எட்டு நாட்களில் காலை, மாலை என 2 பிரிவுகளாக கூட்டம் நடைபெறுகின்றது. காலை 9.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் சட்டப்பேரவைக் கூட்டம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.*

*மானியக் கோரிக்கை மசோதா மீதான விவாதம் 8 நாள் மட்டுமே நடத்தப்படுகிறது.*

*29ம் தேதி முதல்வர் பதிலுரை!*

*21ஆம் தேதி (வெள்ளி) நீர்வளத்துறை, தொழிலாளர் நலன் ஆகிய துறை கள் மீது விவாதம் நடத்தப்பட்டு அந்தத் துறைகளுக்கான நிதி ஒதுக்கப்படும். அன்றைய தினம் மாலை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மீது விவாதம் நடத்தப்படும்.*

*22ஆம் தேதி காலை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை மாலை வேளாண் மற்றும் உழவர் நலத்துறை, கால் நடை பராமரிப்பு, மீன்வளம், பால்வளம்,*

*23ஆம் தேதி (ஞாயிறு) அரசு விடுமுறை.*

*24ஆம் தேதி காலை உயர் கல்வித் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, பள்ளிக் கல்வித் துறை, மாலை நீதி நிர்வாகம், சட்டத்துறை, செய்தி மற்றும் விளம்பரம், தமிழ் வளர்ச்சித் துறை,*

*25ஆம் தேதி காலை நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, பொதுப்பணித்துறை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம், வனத்துறை, மாலை பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, கைத்தறி, போக்குவரத்துத் துறை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,*

*26ஆம் தேதி காலை - திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, பொதுத் துறை, மாலை சுற்றுலாத் துறை, வணிக வரிகள், முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவுத் துறை, இந்து சமய அறநிலையத் துறை,*

*27ஆம் தேதி காலை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை, சிறப்பு திட்ட செயலாக்கத் துறை, கைத்தறி மற்றும் துணிநூல், மாலை கூட்டுறவுத் துறை, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை,*

*28ஆம் தேதி காலை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை, தகவல் தொழில்நுட்பவியல், தொழில் துறை, மாலை காவல், தீயணைப்பு,*

*29ஆம் தேதி காவல், தீயணைப்பு துறை மீதான விவாதத்துக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிலுரை அளிப்பார்.*

*மேலும் 29ஆம் தேதி அரசினர் சட்டமுன் வடிவுகள் ஆய்வு செய்து நிறைவேற்றப்படும்.*

*இன்று தொடங்கும் சட்டப்பேரவைக் கூட்டத் தொடர் 29ஆம் தேதி வரை நடைபெறுகின்றது.*

*வருகிற ஜூலை 10 அன்று நடைபெற உள்ள விக்கிரவாண்டி இடைத் தேர்தலையொட்டி இந்தக் கூட்டத் தொடர் 9 நாட்கள் மட்டுமே நடத்தப்படுகிறது.*